# திருப்பத்தூர் சுகாதார பணிகள் துணை இயக்குநரின் செயல் முறை ஆணை

பிறப்பிப்பவர்: மரு. த.ரா.செந்தில், எம்பிபிஎஸ்., டிபிஎச், எம்பிஎச்,

மூ.மு.எண். 8320/அ3/2023

நாள். 11/12/2023

பொருள்: பணியமைப்பு - பொது சுகாதாரம் – திருமதி கி.மகேஸ்வரி, இளநிலை உதவியாளர், காக்கணாம்பாளையம் ஆரம்ப சுகாதார நிலையம், ஆண்டியப்பனூர் சமுதாய சுகாதார நிலையம், திருப்பத்தூர் சுகாதார மாவட்டம் – பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை:
1. அரசு ஆணை எண்.104, சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை, நாள். 21.05.2003.
2. 12.01.2023 நாளிட்ட சென்னை-06, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை இயக்குநரின் செயல் முறை ஆணை ந.க.எண். 34916796/பநோ.4/எஸ்.4/2022-19.
3. 08.12.2023 நாளிட்ட ஆண்டியப்பனூர் ஆரம்ப சுகாதார நிலைய வட்டார மருத்துவ அலுவலரின் கடித ந.க.எண். 3300/அ3/2023.

..............

**ஆணை:**

பார்வை 2-ல் காணும் ஆணையின்படி, திருமதி.கி.மகேஸ்வரி என்பவர் பதவி உயர்வில் இளநிலை உதவியாளராக திருவண்ணாமலை மாவட்டம், நம்மியம்பட்டு அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு பணியமர்த்தப்பட்டு 10.02.2023 முற்பகல் பணியில் சேர்ந்தார்.

பார்வை 1-ல் காணும் அரசு ஆணையில் வழங்கப்பட்ட அதிகாரப் பகிர்வின்படி, திருவண்ணாமலை மாவட்டம், நம்மியம்பட்டு அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் பதவி உயர்வில் 10.02.2023 அன்று இளநிலை உதவியாளராக பணி நியமனம் செய்யப்பட்டு தற்பொழுது ஆண்டியப்பனூர் வட்டார முதன்மை ஆரம்ப சுகாதார நிலையத்திற்குட்பட்ட காக்கணாம்பாளையம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திருமதி.கி.மகேஸ்வரி என்பவருக்கு தமிழ்நாடு அரசு பணியாளர் (பணிநிபந்தனைகள்) சட்டம் 2016 உட்பிரிவு 28(1)-ன்படி இளநிலை உதவியாளர் பதவியில் 10.02.2023 முற்பகல் முதல் பணிவரன்முறைபடுத்தி ஆணை வழங்கப்படுகிறது.

இவர் மூன்றாண்டு தொடர் பணிகாலத்தில் இரண்டாண்டு தகுதிகாண் பருவ காலத்திற்குள் பவானிசாகர் அடிப்படைப் பயிற்சியினை நிறைவு செய்ய அறிவுறுத்தப்படுகிறது.

இவர் 10.02.2023 முற்பகல் முதல் மூன்றாண்டு தொடர் பணி காலத்தில் இரண்டாண்டு தகுதிகாண் பருவ காலத்தை நிறைவு செய்யுமாறு அறிவிக்கப்படுகிறது.

த.பி.பா.,

Scanned with OKEN Scanner

இவ்விவரங்கள் உரியவரின் பணிப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளன எனச் சான்றளிக்கப்படுகிறது.

11/12/23

துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள்,
திருப்பத்தூர்.

11.12.23

**பதிவு அஞ்சல் ஒப்புகை அட்டையுடன்**

**பெறுநர்:**

திருமதி கி.மகேஸ்வரி, இளநிலை உதவியாளர், ஆரம்ப சுகாதார நிலையம்,
காக்கணாம்பாளையம்.

- ஆண்டியப்பனூர் வட்டார ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ அலுவலர் மூலமாக.

**நகல்:**

1. மருத்துவ அலுவலர், வட்டார ஆரம்ப சுகாதார நிலையம், ஆண்டியப்பனூர் - 2 நகல்கள்.
   (பணியாளரின் பணிப்பதிவேடு ஒரு தொகுதி இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது)
2. பணிப்பதிவேட்டிற்கு.
3. உபரி.

Scanned with OKEN Scanner